DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Bill, 1970 (L.A. Bill No. 22 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

(3) *The Tamil Nadu Agricultural Produce Market (Amendment and Validation of Cess) Bill, 1970 (L. A. Bill No. 29 of 1970)*

THE HON. THIRUMATHI SATHIAVANIMUTHU : Mr. Deputy Chairman, Sir, I move—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill,* 1970 (L.A. Bill No. 29 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

Under the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959), Market Committees had been constituted in the districts for the better regulation of buying and selling of agricultural produces and the establishment and proper administration of markets for agricultural produces in the State of Tamil Nadu. The main source of income of such Market Committees is cess which is levied by them upon the sale of purchase of notified agricultural produces in pursuance of the powers conferred under sub-section (1) of section 18 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959). Sub-section (3) of the said section provides that the cess so levied shall be subject to the provisions of Article 286 of the Constitution. According to clause (3) of Article 286 of the Constitution, any law of a State shall, in so far as it imposes, or authorises the imposition of, a tax on the sale or purchase of goods declared by Parliament by law to be of special importance in inter-State trade or commerce, be subject to such restrictions and conditions in regard to the system of levy, rates and other incidents of the tax as Parliament may by law specify. By virtue of this Article, the Parliament has enacted the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956), which *inter alia* declares certain goods to be of special importance in inter-state trade or commerce and specifies the restrictions and conditions subject to which State laws can impose taxes on the sale or purchase of such declared goods, namely, the tax payable by any dealer inside the State shall not exceed two per cent (three per cent from 1st July, 1966) of the sale or purchase thereof and such tax shall not be levied at more than one stage in a State. The point of levy and the rate of cess which is levied by way

* Printed as Appendix IV.

of sales tax under section 18 of Tamil Nadu Act 23 of 1959 on those notified agricultural produces which are declared goods should, therefore, be in accordance with section 15 of the Central Sales Tax Act, 1956. 5-00 p.m.

The High Court of Madras, while disposing of Writ Appeal No. 468 of 1968 against the judgement in Writ Petition No. 458 of 1964, held that the levy of cess on groundnut by the Market Committee under section 18 of Tamil Nadu Act 23 of 1959, was illegal and unconstitutional, as it was *not* in conformity with Article 286 of the Constitution, read with Section 15 of the Central Sales Tax Act, 1956 so far as declared goods are concerned. Basically, an identical view was expressed by the High Court in Writ Petition No. 4497 of 1965.

It was, therefore, proposed to amend section 18 of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, so as to be in conformity with the provisions of Article 286 of the Constitution and of section 15 of the Central Sales Tax Act, 1956 and to validate the levy and collection of cess under the said Act in so far as it is consistent with the provisions of Article 286 of the Constitution. Provision for the revision of the cess levied and collected under the said Tamil Nadu Act in respect of the notified agricultural produces which are declared goods, in accordance with section 18 of the said Tamil Nadu Act now and for the refund of the excess cess levied and collected under the said Tamil Nadu Act has been made. The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Ordinance, 1970 (Tamil Nadu Ordinance 2 of 1970) was promulgated by the Governor to give effect to the above proposals.

This Bill seeks to replace the said Ordinance.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 (L.A. Bill No. 29 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations"

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் நாடு விளைபொருள் சட்டத்தின்படி நமது அரசு கொண்டு வந்த இந்தச் சட்டத்தை அமுலாக்குவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களை யெல்லாம் தீர்க்கும் முறையில், சமீபத்தில் வந்த சில ஹைகோர்ட்டுத் தீர்ப்புகளுக்கு நடுவிலே அவைகளையெல்லாம் சமாளிக்கிற முறையில், ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு, அதற்குப் பிற்பாடு, மார்க்கடிங் கமிட்டி விற்பனைக் கூடங்களை நடத்துவதற்கு உதவிகரமாக இருக்கிற நிலையில், இந்த மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு நான் ராமநாதபுரம் மார்க்கடிங் கமிட்டித் தலைவர் என்ற முறையில் நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தப் பொறுப்பை நிர்வகித்து வருகிற நேரத்தில் வட ஆற்காடு ஜில்லாவிலே எங்கு

பார்த்தாலும் குழப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டது. வரி வசூல் செய்வதில் அந்தச் சட்டத்தின்படி, வரி வசூல் செய்வது சரியா இல்லையா என்று கூட தார்மீக முறையில் யோசித்துக்கொண்டிருந்த நிலையில், அந்த மாதிரியான குழப்பமான நிலை நீடித்துக் கொண்டு போகாமல் இருக்க இந்த மாதிரிச் சட்டம் கொண்டு வந்து மார்க்கடிங் கமிட்டி நடத்த நல்ல சூழ்நிலை உண்டாக்கியதற்காக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இது கூட செல்லாது என்று ஹைகோர்ட்டில் போய் வாதாட இன்னும் ஏதாவது ஓட்டை இருக்கிறதா என்று பார்ப்பார்கள். ரிட் கொடுக்க வழி இருக்கிறதா என்று பார்ப்பார்கள். நம்முடைய சட்டக் காரியதரிசியைப் பார்த்து நன்றாக, ஆலோசனை செய்து, எதிலும் கோளாறு இல்லாத நிலைமையில் ''ஃபூல் புருஃப்'' ஆக இருக்கவேண்டும் என்று சொல்லியிருந்தேன். அந்த முறையில் சட்டம் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். இனிமேல் இந்தச் சட்டத்தை அமுல் படுத்துவதிலே சிரமம் இருக்காது என்று நினைக்கிறேன். இந்த செஸ் வசூலிப்பதிலோ அல்லது பீஸ் வசூலிப்பதிலோ, அந்த இடத்தில் வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கவில்லை என்ற அடிப்படையில் சட்டம் செல்லாது என்று சொல்ல சில இடங்களில் முயற்சிக்கலாம். இப்போது ராமநாதபுரத்தில் இரண்டு மார்க்கடிங் கமிட்டிக் கட்டடங்கள் கட்டியிருக்கிறோம். நல்ல முறையில் வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். விவசாய அமைச்சர் அவர்களுக்கு அங்கிருக்கிற கஷ்டங்கள் தெரியும். அதற்குப் பரிகாரம் காணுகிற முறையில் விளை பொருள்களை விவசாயிகள் கொண்டு வந்து கொடுத்து அவை விற்பனையாகிற வரை அவர்களுக்கு வசதிகள் தரப்படுகின்றன என்ற நிலையை உருவாக்க வேண்டும். அப்போது தான் கோர்ட்டுக்குப் போனாலும் நிலைத்து நிற்பதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்படும். கம்பல்சரி மார்க்கடிங் கட்டாய மார்க்கடிங் கொண்டுவரவேண்டும். அவர்கள் அந்த இடத்திலே தான் கொண்டு வந்து விற்கவேண்டும் என்று ஏற்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த மாதிரிச் சிக்கல் ஏற்படும். கம்பல்சரி மார்கடிங் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த கம்பல்சரி மார்கடிங் நல்ல முறையில் வேலை செய்தால் நல்லது. விவசாயிகளுக்கு நல்ல விலைகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இதை ஆதரிக்கிறேன்.

திரு. எம். எத்திராஜுலு: மன்றத் தலைவர் அவர்களே, இந்த
5-10 p.m. விவசாய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சம்பந்தமான இந்த மசோதாவின் மீது நான் சில கருத்துரைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டமானது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று விவசாயிகளிடமிருந்து இந்த செஸ் வசூலிப்பது முறையாகாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பேரில், அந்தத் தீர்ப்பையொட்டி வாங்கிய பணத்தையெல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டால், அந்த விற்பனைக் கூடங்களுக்கான செலவுகளை யார் ஏற்றுக்கொள்வது என்ற முறையில் இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. கொண்டுவந்ததைப் பற்றி நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. ஆனால் முறைப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற விற்பனைக் கூடங்களில் விற்பதற்கு

வேண்டிய நல்ல முறைகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமானால், அதை நன்றாக வரவேற்க முடியும். இப்போது 'செஸ்' என்பதை மாற்றி 'கட்டணம்' என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய ஜில்லாவிலே பெருவாரியான நிலங்களில் மணிலாக் கொட்டைப் பயிர் தான் விவசாயம் செய்யப்படுகிறது. மணிலாப்பயிர் தான் அங்கே அதிகமாக விற்கப்படுகிறது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். அப்படி அதிகமாக மணிலாப் பயிர் விளைவிக்கும் அவர்களுக்குக் காலாகாலத்தில் செய்யவேண்டிய உதவிகளைச் செய்தால், இன்னும் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த விவசாயிகள் மணிலாப்பயிரைத் தொலை தூரத்திலிருந்தெல்லாம் கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டுவந்து மணிலாப்பயிர்களை விற்பனைக் கிடங்குகளில் வைக்கிறார்கள். அவர்கள் அப்படி வந்து தங்குவதற்கு, எங்கள் ஜில்லாவில் எந்த எந்த இடங்களில் மார்க்கடிங் விற்பனைக் கூடங்கள் இருக்கின்றனவோ, அங்கே அந்த வசதிகள் குறைவாக இருக்கின்றன.

<u>மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் :</u> தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். விழுப்புரத்தில் இருப்பது போல தமிழ் நாட்டில் வேறு எங்கும் அப்படி அழகான கட்டிடங்கள் இல்லை. அவர் எதைச் சொல்கிறார் என்று தெரிந்தால், நன்றாக இருக்கும்.

<u>திரு. எம். எத்திராஜுலு :</u> இப்போது நான் சொல்வதை அமைச்சர் அவர்கள் முறையாகத்தெரிந்து கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். கடலூரில் சென்ற 6 மாதங்களுக்கு முன்பு திறப்புவிழா செய்யப்பட்டது. விருத்தாசலம் போன்ற இடங்களில்,கிராமப்பகுதிகளிலெல்லாம் மணிலாப் பயிரைக் கொண்டு வந்து போட்டு அங்கே தங்குவதற்கு வசதியில்லை. காய் வைப்பதற்கு வசதியில்லை. மூட்டைகள் விற்காதபோது மூட்டைகளை வைத்து விட்டுப்போக பயப்படுகிறார்கள். இதையெல்லாம் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் சொல்கிறேனே தவிர, இப்போது வசதிகள் செய்யப்பட்டிருக்கிற இடத்தையெல்லாம் குறைகூறவில்லை. இன்னும் நெடுந் தூரத்திலிருந்து வருகிறார்கள். அவர்கள் வருவது காலையில். மணிலாப் பயிருக்குள்ள விலையை மறு தினம் கூடக் கொடுக்கிறார்கள். மறு தினம் கொடுக்கிற வேளையில் இரவு நேரங்களில் கொடுக்கிறார்கள். இரவு வேளையில் தொலை தூரத்திலிருந்து வருபவர்கள் இந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு பயமின்றி ரோடு வழியில் செல்ல முடியுமா என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், ஒழுங்குபடுத்த வேண்டும், சீர்படுத்த வேண்டும். சீர்படுத்தி நல்ல முறையில் இன்றைக்கு விவசாயிகளுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுத்தாலொழிய, அதிகமாக உற்பத்தி செய்வதற்குத் தடையாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று, அவர்கள் மணிலாப்பயிர் போடுகிற நேரத்தில், அங்கே விற்பனை செய்வதை வாங்குகிறவர்கள் பலர் சாம்பிளாக எடுத்துக் கொள்ளுகிற பயிறுகள் அதிலே குறைந்துபோய் விடுகின்றன என்பதை நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அப்படிக் குறைவு ஏற்படுகிற பயிறுகளை எல்லாம் அவர்கள் திருப்பிக்கூட கொடுப்பதில்லை. ஆனால் இவர்களுடைய மணிலாப்பயிர் பூராவும் அங்கே எடை போடுகிற நேரத்தில் அதோடு சேர்த்து விடப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அது அவைகளோடு சேருவதுமில்லை, அதை அப்படிச் செய்வதும் கிடையாது. ஆனால் விவசாயிகள் ஏமாற்றப்படுகிற நிலையிலேதான் இன்று செயல்படுகிறது. மற்றொன்று நான் அரசினுடைய கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு விவசாயி மணிலாப் பயிரைக் கொண்டு வந்து விற்க முடியாமல் போனால், அங்கே வைத்து விட்டுச்சென்று, பிறகு சரியான விலை வரும் வரையில் 10 நாள், 8 நாள் தங்கியிருந்து விற்பனை செய்துகொண்டு போக வேண்டும். இல்லா விட்டால், மறுபடியும் வந்து போக வசதி கிடையாது. அதைக்கண் டித்துக் கேட்க முடியாது. கண்டித்துக் கேட்டால் அது இது என்று சொல்லி விடுகிறார்கள். அவர்கள் அங்கேயே தங்கி விற்க முடியாத நிலையைப் பார்க்கிறோம். அது அரசினுடைய தவறு அல்ல. அவர்களுக் குக் கொடுக்கக் கூடிய இன்ஸ்டிரக்ஷன்ஸ். இந்த நிலை நீடிக்கக் கூடாது. ஆகவே விவசாயிகள் அந்த இடத்தலேயே தங்கி நல்ல விலை வரும்போது விற்பனைசெய்ய வசதியளித்தால்தான், விவசாயிகளுக்கு நல்ல காரியம் செய்ததாக இருக்கமுடியும் என்பதைத்தான் நான் இந்த சந்தர்ப் பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப் பல்வேறு சங் கடங்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய மாவட்டத்தில் கடலூரிலே தான் நல்ல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக் கின்றன. அந்தக் கட்டிடங்களைப் போல மற்றப் பகுதிகளிலும் நல்ல கட்டிடங்கள் கட்டி, அவர்கள் தங்குவதற்கும், மாடு, வண்டிகளை விடுவதற்கும், அவர்கள் பயிர்களை அவசர அவசரமாக எடுத்துக்கொண்டு வந்து அந்தக் கட்டிடங்களில் வைத்துக்கொண்டு அங்கேயே உலர்த்து வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் அரசினருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, விவசாயப் பொருள்களுக்குச் சரியான விலை, நேர்மையான அளவைகள், இவைகளை யெல்லாம் விவசாயிகளுக்கு அனுகூலமாகப் பயன்படுத்த வேண்டும், அவர்கள் அதன் பலனை அடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இத்தகைய ஏற்பாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே செய்யப்பட் டிருக்கின்றன என்றாலும் கூட, தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் இந்த பின்வரும் அனுபவங்கள் இருக்கலாம்: விவசாயிகள் பல தலைமுறை களாக வியாபாரிகளோடு தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால், இவைகளினுடைய அனுகூலங்கள் தெரிந்திருந்தும்கூட, அவர்களுடைய தொடர்பை அறுத்துக் கொள்வதற்குத் தயக்கம், பழக்க வழக்கங் களினாலேயும், தாட்சண்யத்தினாலேயும் ஏற்படுகிறது என்று தான் நான் கூற வேண்டும். கூட்டுறவுத் துறையிலே கூட ஒவ்வொரு தாலுக்கா

விலும் கூட்டுறவு மார்க்கெடிங் சொசைடிகள் இருக்கின்றன. தாலுக்காவில் மட்டுமல்ல, வட்டார அளவிலே கூட மார்க்கெடிங் சொசைடிகள் இருக்கின்றன. ஆண்டுதோறும் பொருளாதாரக் கடன் என்று ரூ.50 கோடி, 60 கோடி நம் மாநிலத்தில் கொடுக்கப்படுகிறது. அந்த விளைபொருள்களை மார்க்கெடிங் சொசைடிகள் மூலமாக விற்க வேண்டும் என்பது திட்டம். ஆனால் ஆயிரத்திற்கு ரூ. 100 என்ற அளவிலோ அல்லது ரூ. 50 என்ற அளவிலோ கூட மார்க்கெடிங் சொசைடிகளுக்கு வருவதில்லை. இது நான் மேலே சொன்ன பழக்க வழக்கங்களினால் ஏற்பட்டுள்ள நிலைமை. அதேபோல இந்தக் கட்டுப்பாடான மார்க்கெடிங் வசதி இருந்தும் கூட, இன்னும் சில வசதிகள் அந்த ஸ்தாபனங்களிலே செய்யப்பட்டிருக்குமானால், வியாபாரம் அதிகமாக நடக்குமென்று நான் கருதுகிறேன். நம் தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், தென்னாற்காடு மாவட்டத்தில் தான் இந்த நிறுவனங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம், திண்டிவனம் போன்ற சில இடங்களில் நான் நேரிலே சென்று கூடப் பார்த்தேன். அவை நல்ல முறையில் செயல்படுகின்றன என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது. அதற்கு அடுத்து வட ஆற்காட்டைச் சொல்லலாம். கூட்டுறவு சம்பந்தப்பட்ட மட்டில், மார்க்கெடிங் சொசைடி சரியாகச் செயல்படுகிறது, விவசாயிகளோடு அந்த சொசைடி தொடர்பு கொண்டிருக்கின்றது என்றால் அதற்கு சேலம் ஜில்லாவைக் குறிப்பிட வேண்டும். சேலம் ஜில்லாவில் திருச்செங்கோட்டிலுள்ள மார்க்கெடிங் சொசைடி டைரக்டர்கள் கிட்டத்தட்ட அந்தப் பகுதியிலுள்ள நூற்றுக்கு 90 சத விகித விவசாயிகளோடு தொடர்பு கொண்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

இம்மாதிரி வியாபாரிகள் ஒன்றாகச் சேர்ந்து டெண்டர் போட்டு அந்த மார்க்கெட்டுகளில் விற்கக் கூடிய பொருள்கள், ஏலத்தின் மூலமாக விற்கப்படுகின்றன. அந்தப் பொருள்களுக்கு உடனேயே பணத்தை சொசைடியில் செலுத்தித்தான் பஞ்சு, பருத்தி முதலிய பொருள்களை வியாபாரிகள் வெளியே கொண்டுபோக வேண்டும். பஞ்சு, பருத்தி ஆகிய இரண்டு பொருள் வியாபாரத்தில் உடனே பணத்தைக்கட்டி அந்தப் பொருட்களைக் கொண்டுபோக வேண்டுமென்று நாம் வைத்தோமானால், நம் தமிழ் நாட்டிலேயும் அது நடக்காது, இந்தியாவிலேயும் நடக்காது என்ற அனுபவத்தை நாம் கண்டுகொள்ள வேண்டும். அந்த மார்க்கெட் காரர்களுக்கோ, வியாபாரிகளுக்கோ உடனே பணம் செலுத்தக் கூடிய தகுதி கிடையாது. ஆகவே பஞ்சு, பருத்தியை எடுத்துக்கொண்டுபோய் இத்தனை நாட்களுக்குள்ளாகப் பணம்செலுத்த வேண்டுமென்று சொன்னால் வியாபாரம் ஆகும். பணத்தைக் கட்டிவிட்டு, சரக்கை எடுத்துக்கொண்டுபோக வேண்டுமானால், சரக்கு மார்க்கெட்டிலேயே தான் இருக்கும். பஞ்சு வியாபாரி தன் தொழிலை நடத்த முடியாது. பாங்கிகளில் ஸ்டாக் வைத்துக்கொண்டு கடன் வாங்கித்தான் அவர்கள் சொசைடிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டும். ஆகவே எத்தனை கோடி கோடியாக முதலீடு செய்தாலும்

கூட, அந்தப் பொருள்களுக்கு முழுக்கப் பணம் கொடுப்பதற்குத் தேவையான பணத்தை அவர்கள் சம்பாதித்து வைத்துக் கொண் டிருக்க முடியாது. ஆகையினால் பஞ்சு, பருத்தி முதலிய விசேஷப் பொருள்களுக்கு ஏற்றவாறு மார்க்கெடிங் கமிட்டிகளை அமைத்து, அதை வாங்கக் கூடியவர்கள் ஒரு அவகாசத்தில் பணம் கொடுப்பதற்கு வசதிகளை அந்தக் கமிட்டிகள் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்தக் கமிட்டிகள் செய்யும் வேலைகள் இன்னும் பரவலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்னும் கூட எப்படி மார்க்கெட் கமிட்டி சொசைடிகள் செயல்படுகின்றனவோ, அதற்குத்தக்கவாறு அந்த மார்க்கெடிங் நிறுவனங்களாக வியாபாரிகள் இருந்துகொண் டிருக்கிறார்கள். திரு. ஜெயராமரெட்டியார் அவர்கள் சொன்னதுபோல அவர்களுக்கு அதற்கு வேண்டிய விசேஷ நிதி இருக்கிறது. வசதியான கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஆனால் அதன் பக்கத்திலே விவசாயிகள் வருவதில்லை. அவர்கள் நீண்ட நாட்களாக, பழக்க வழக்கங்கள் காரண மாக, வியாபாரிகளிடத்தில் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் ஆயிரமாக நாம் கடன் கொடுத்தாலும் தீபாவளி, பொங்கல், மாதப் பிறப்பு மற்றச் சடங்குகளுக்கு நினைத்தபோதெல்லாம் ரூ. 4, ரூ. 3, ரூ. 2 என்று சாதாரணமாகக் கடன் கொடுக்கிறவர்கள் தான் அவர்களுக்குப் பெரியவர்களாக இருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் ஸ்தாபனம் அவர்களுக்குப் பணம் கொடுத்தாலும் அதைப் பேருத வியாகக் கருதுவதில்லை. அப்படிப்பட்ட எண்ணங்கள் சமுதாயத்தில் நீண்ட நாட்களாக வேரூன்றிப்போயிருக்கின்றன. அதை மாற்று வதற்கான உபாயங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஓரளவு, திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் சொன்னதுபோல, அந்தக் கமிட்டிகள் மூலமாகத்தான் அந்தச் சரக்குகளைக் கொண்டு வந்து விற்று நல்ல பலனை அவர்கள் அடையவேண்டுமானால், நடுத்தரகர்கள் மூலம் அவர்கள் விலைவாசி முதலியவற்றில் ஏமாந்துபோகாமலிருப் பதற்காக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமானால், வியாபாரி களுடைய குறுக்கீட்டிலிருந்தும், நடுத்தரகர்களிடமிருந்தும் அவர்கள் தப்புவதற்கான நல்ல ஒரு உபாயத்தையும், வழி வகைகளையும் நாம் கண்டுபிடிக்கவேண்டும். அல்லது கூட்டுறவு முறையிலோ அல்லது வேறு முறையிலோ அவர்களுக்குப் பணம் கொடுக்கும்போது, அவர்கள் இவ்வாறு நடந்து கொள்ளத் தவறினால், ஒரு அபராதம் அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையில் மறைமுகமான வகையில் நிர்ப்பந்தப் படுத்தவேண்டும். கூட்டுறவுகள் மூலம் ரூ. 70 கோடி, ரூ. 60 கோடி கடன் கொடுத்தாலும் மார்க்கெடிங் சொஸைடிக்கு பொருள்கள் எவ்வளவு வருகின்றன என்று பார்த்தால், அது கேலிக்குரிய முறையிலே தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் மார்க்கெடிங் கமிட்டி கள் இருக்கின்ற கட்டிடங்கள் இருக்கின்றன, நிதி கிடைக்கிறது என்பது மட்டும் போதாது. அதனுடைய பலனை எந்த அளவில் விவசாயிகள் அனுபவிக்கிறார்கள், அப்படி இருப்பதற்குக் காரணம் என்ன, அதற்கு வேறு உபாயங்கள் என்ன என்பதைச் சரியாக விசாரணை செய்து, அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப் பத்தில் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

5-20 p.m.